பல்வேறு நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு நிறைவான தண்ணீர் செல்லவில்லையென்று கூறுகிறார். அதை ஆய்வு செய்து, நிறைவான தண்ணீர் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

154—

மூலிகை ஆராய்ச்சி மையம்

***14689—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதி, அய்யனார்கோயில் மலைப் பகுதியில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அய்யனார்கோயில் மலைப் பகுதி அரிதான சாம்பல் நிற அணில்கள் வாழும் வன உயிரினக் காப்பகமாக அறிவிக்கப்பட்ட பகுதி என்பதால், மூலிகை தாவரங்கள் சேகரம் செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியில் ஆராய்ச்சிக் கூடம் மற்றும் கட்டடங்கள் கட்ட இயலாது. மூலிகை ஆராய்ச்சி மையம் வனப் பகுதியின் உள்ளே அமைவது உகந்ததாக அமையாது. எனவே, ராஜபாளையம் தொகுதி அய்யனார்கோயில் மலைப் பகுதிகளில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர் மாண்புமிகு*

2013 ஏப்ரல் 5]

தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கம்.

ராஜபாளையம் தொகுதியிலுள்ள அய்யனார்கோயில் மலைப் பகுதி என்பது மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய அடிவாரத்தில் அமைந்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையை "பொதிகை மலை" என்றும் அழைப்பார்கள். இந்த மலை தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பித்து கேரளா, கர்நாடகா, ஆந்திரா வழியாக மஹாராஷ்டிரா வரையில் செல்கின்றது. இந்தப் பொதிகை மலையில் மிக அபூர்வமான மூலிகைகள் கிடைக்கின்றன. நவீன அலோபதி மருத்துவத்தில் குணப்படுத்த முடியாத பல நோய்களைக்கூட இந்த மலையில் கிடைக்கின்ற மூலிகைகள்மூலம் குணப்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

குறிப்பாக, மாண்புமிகு அம்மா அவர்கள் சமீபத்தில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு "நில வேம்புக் கஷாயம், பப்பாளி இலைச் சாறு, ஆடுதொடா இலை" இப்படி பல மூலிகைகளைக் கொண்ட கஷாயங்களைத் தயாரித்து வழங்க உத்தரவிட்டு, டெங்கு காய்ச்சல் மற்றும் பேர் சொல்ல முடியாத காய்ச்சல்கள் தமிழகத்தில் இல்லாத நிலையை உருவாக்கினார்கள். இப்படி மருத்துவர்களுக்கே மருத்துவராக விளங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ராஜபாளையம் மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய அடிவாரத்தில் உள்ள அய்யனார்கோயில் பகுதியில் ஒரு சிறப்பு ஏற்பாடாக மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அய்யனார்கோயில் வனப் பகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர், சாம்பல் நிற அணில், வன உயிரின உய்விடத்தில் அமைந்துள்ளது. இவ்வன உயிரின உய்விடம் 47,665 ஹெக்டேர் பரப்பளவில், அரசாணை எண் 399 சுற்றுச்சூழல் மற்றும் வனம் 5 துறை, நாள் 2-6-1988-ன்படி வன உயிரின உய்விடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வன உயிரின உய்விடத்தில் உலகில் மிக அரிய வகை உயிரினமான சாம்பல் நிற அணில்கள் சுமார்

960 எண்ணிக்கையில் அய்யனார்கோயில் போன்ற பகுதிகளில் 600 மீட்டர் உயரம் உள்ள மலைக் காடுகளில்தான் அதிக அளவில் வாழ்கின்றன. இதைத்தவிர இவ்வன உயிரின உய்விடத்தில் 60 யானைகள், 6 புலிகள், 10 சிறுத்தைகள், மாநில விலங்கான 84 வரையாடுகள், 36 சிங்க வால் குரங்குகள், இதைத் தவிர தேவாங்கு, காட்டு மாடுகள், கரடிகள், வெள்ளை மந்தி, கருமந்தி, புள்ளிமான், மிளா, சருகுமான், கோழையாடு, நட்சத்திர ஆமை, எறும்பு தின்னி, இந்திய மலை அணில், இராஜநாகம் போன்ற பல அரிய விலங்குகள் காணப்படுகின்றன. இப்பகுதியில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும் கட்டடங்கள், ஆராய்ச்சி மையம், வனத்தின் உள்ளே அமையும் நிலையில், மேற்கண்ட வன உயிரினங்கள் வாழ்விடத்திற்கு உகந்ததாக அமையாது. ஏற்கெனவே விருதுநகர் மாவட்டத்தில் உள்ள வத்திராயிருப்பு அருகில் இதே வன உயிரின உய்விடத்திற்கு உட்பட்ட தாணிப்பாறை மலைப் பகுதியில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 1991-1996 ஆட்சிக் காலத்தில் 1993 ஆம் ஆண்டு 100 ஹெக்டேர் பரப்பில் மூலிகைப் பண்ணை அமைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், மீண்டும் ஒரு மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகள் அரிதான மலைக் காடுகளையும், அரிய வகை உயிரினங்களையும் உள்ளடக்கியது. இது பல்லுயிர் பெருக்கத்திற்கு சிறந்த ஒரு புகலிடமாக இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால்,* World Heritage Status *என்ற ஒரு சிறப்பான அந்தஸ்தை உடையதாக இருக்கிறது. தற்போது மத்திய அரசு மேற்குத் தொடர்ச்சி பாதுகாப்பு ஆணையம் என்கின்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, மேற்குத் தொடர்ச்சி மலைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய ஓர் அமைப்பை உருவாக்க முயற்சி செய்வதாக நான் செய்தித்தாட்கள் வாயிலாக அறிந்திருக்கிறேன். இத்தகைய செயல்பாடுகள், குறிப்பாக தமிழகத்தில் இருக்கக்கூடிய மேற்குத் தொடர்ச்சி மலைகளிலே, தமிழக அரசுக்கு இருக்கக்கூடிய உரிமையினை நம்முடைய*

செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலே இது அமையுமோ என்கின்ற ஒரு அச்ச உணர்வு இருக்கின்றது. எனவே, இதைத் தடுப்பதற்கும் நம்முடைய மாநில அரசுக்கு குறிப்பாக வனத் துறைக்கு, . . .

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், மூலக் கேள்விக்கு சம்பந்தமான துணைக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலைமீது நமக்கு இருக்கக்கூடிய மாநில அரசின் உரிமையை வனத் துறையினுடைய உரிமையை நிலை நிறுத்திக்கொள்வதற்கு மாநில அரசு எந்தவிதமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது, எடுக்க இருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையிலே தமிழக அரசுக்குள்ள உரிமையை என்றைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விட்டுக்கொடுக்காது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

155—

சாலையை அகலப்படுத்துதல்

***6111—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—